

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | பிப்ரவரி 17, 2022 | புரட்சி 21 | முழக்கம் 05 | விலை: ரூ.3.00

## காதலர் நாளில் குடும்ப விழா – மகிழ்வு கொண்டாட்டம்

# ஜாதி மறுப்பு இணையர்களுக்கு விருதுகள்

***காதலர் நாளை ஜாதி மறுப்பு இணையர்களுக்கு விருதுகள் வழங்கி குடும்ப விழாவாகக் கொண்டாடியது திராவிடர் விடுதலைக் கழகம்.***

*பிப். 14, காதலர் நாளையொட்டி ஜாதி மறுப்பு திருமணம் புரிந்த 14 இணையர்களுக்கு விருதுகள் வழங்கும் விழாவை சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் மகிழ்ச்சி குதூகலமாக நடத்தியது. மாலை 5.30 மணியளவில் இராயப்பேட்டை இலாயிட்ஸ் சாலையில் உள்ள விஜய் திருமண மண்டபத்தில் காதலைப் போற்றும் திரையிசைப் பாடல்களுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின.*




*தொடர்ந்து புத்தக வாசிப்பு கவிதை அரங்கேற்ற நிகழ்வுகள் நடந்தன. ஜாதி மறுப்பு திருமணம் செய்து கொண்ட கழகத் தோழர் ஜெயப் பிரகாஷ் ‘ஜாதியை மறுத்துப் பார்’ என்ற அவரது கவிதையை வாசித்தார். தோழர் இரண்யா, “எது கலாச்சாரம்?” என்ற தலைப்பில் தமிழ்ச்செல்வன் எழுதிய நூலிலிருந்து சில பகுதிகளையும் தேன்மொழி, பெரியாரின் ‘பெண் ஏன் அடிமையானாள்’ நூலிலிருந்து பெரியார் தனது உறவுப் பெண்ணுக்கு மறுமணம் செய்து வைத்ததை விவரித்து பெண்களின் மறுமண முறையை வலியுறுத்தி எழுதிய பகுதிகளையும், தோழர் ரம்யா தமிழ்ச் செல்வன் எழுதிய “எது குடும்பம்?” நூலிலிருந்து ஒரு பகுதியையும் வாசித்தனர். தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் தனது இளமைக் காலத்தில் தான் விரும்பிய ‘மாதங்களில் அவள் மார்கழி’ திரைப் பாடலைப் பாடி நிகழ்ச்சியை கலகலப்பாக்கினார். ஜாதி மறுப்பு இணையர்கள் முன்னிலையில் மேடையில் குடும்ப விழா மகிழ்வாக பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் - சரசுவதி இணையர் கேக் வெட்டினர். அனைவரும் குழுவாகப் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். ஜாதி மறுப்பு இணையர்களுக்கு விருது மற்றும் நூல்களை விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் சரசுவதி, சிறப்புரையாற்றிய மனநல மருத்துவர் சிவபாலன் வழங்கினர்.*



*மனநல மருத்துவர் சிவபாலன் உரை சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்திருந்தது. காதல் என்பது குறித்து பெரியார் தந்த விளக்கத்தைப் போல் உலகில் எந்த தத்துவவியலாளர்களும் கூறியதில்லை என்று குறிப்பிட்ட அவர், பெரியார் மேற்கோளைப் படித்தார். காதல் ஒரு புனிதமல்ல; அது மாறாததும் அல்ல; ஆசையும் நட்பும் கொண்டது என்பதைத் தவிர அது ‘புனிதம்’ அல்ல என்ற கருத்தை சுட்டிக்காட்டி, தனது உரையைத் தொடங்கினார். காதல் திருமணமானாலும் காதல் செய்யாத திருமணமானாலும் திருமண வாழ்க்கைக்கும் காதலுக்கும் தொடர்பு இல்லை; வாழ்க்கையில் இணையர்களுக்கிடையே எழும் பிரச்சினைகளை எதிர் கொள்ள பின்பற்றப்பட வேண்டிய அணுகுமுறைகளை விளக்கினார். “மனநலம் குறித்து எத்தனையோ மேடைகளில் நான் பேசியிருக்கிறேன்; ஆனால் காதல் திருமண வாழ்க்கைக் குறித்து இப்போது தான் பேசுகிறேன்” என்று குறிப்பிட்டார். பார்வையாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு உரிய விளக்கங்களைத் தந்தார். (அவரது உரை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழில் முழுமையாக வெளி வரும்)*

*தொடர்ந்து நாத்திகன், பழைய இனிமையான திரையிசைப் பாடல்களைப் பாடி அனைவரையும் மகிழ்வித்தார். அனைவரும் பாடலுக்கு நடனமாட அரங்கமே மகிழ்ச்சி குதூகலமாகியது. மாவட்ட செயலாளர் இரா. உமாபதி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். அனைவருக்கும் பிரியாணி உணவு வழங்கப்பட்டது. அரங்கத்தில் பெரியார் பெண் விடுதலைக் கருத்துகள் அடங்கிய ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருந்தன. கொரோனா காலத்துக்குப் பிறகு நீண்டகால இடைவெளியில் ஜாதி மறுப்புக் குடும்பங்களின் விழா தோழர்களுக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தந்தது.*

**சுயமரியாதை சுடர்கள் விருது :** *சென்னையில் பிப்.13ஆம் நாளன்று வழக்கறிஞர் ரமேஷ் பெரியார் நடத்தி வரும் அறிஞர் அண்ணா சுயமரியாதைத் திருமண நிலையம் சார்பில் ஜாதி மறுப்புத் திருமணம் புரிந்து கொண்ட இணையர்களுக்கு ‘சுயமரியாதை சுடர் - 2022’ விருது வழங்கும் விழா சிறப்புடன் நடைபெற்றது. தியாகராயர் நகர் நவபாரத் மெட்ரிகுலேஷன் பள்ளியில் மாலை 5 மணிக்கு புத்தன் கலைக் குழு மணிமாறன் மகிழினி கலை நிகழ்வுகளுடன் நிகழ்ச்சி தொடங்கியது. ஆயிரம் விளக்கு தொகுதி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, ஜாதி மறுப்புக் கொள்கைகளை விளக்கியும் ஒரே ஜாதியில் நெருக்கமான உறவுகளுக்குள் நடக்கும் திருமணங்களில் பிறக்கும் குழந்தைகள் சந்திக்கும் உடல்நலக் கேடுகள் பற்றியும் உரையாற்றினார். நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேரசிரியர் சரசுவதி, மாதர் சங்கம் மாநில பொதுச் செயலாளர் வாலண்டினா, திருநங்கைகள் உரிமை சங்கத்தைச் சார்ந்த ஜீவா ரங்கராஜ் மற்றும் ஜாதி மறுப்பு மணம் புரிந்த இணையர்கள் உரையாற்றினர். நினைவுப் பரிசுகளோடு அனைவருக்கும் பெரியார், அண்ணா எழுதிய நூல்கள் பரிசுகளாக வழங்கப்பட்டன. திருவெறும்பூர் பெரியாரியலாளர் அர.செழிலன், நூல்களை அன்பளிப்பாக வழங்கினார். வழக்கறிஞர் ரமேசு பெரியார் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து தொகுத்து வழங்கினார். இரா. உமாபதி, அன்பு தனசேகர் உள்ளிட்ட சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் நிகழ்வில் பங்கற்றனர்.*

**மதுரையில் :** *காதலர் தின விழாவை ஒட்டி மதுரை திவிக சார்பில் ஜாதி மறுப்பு இணையர்களுக்கு பாராட்டு விழா 13.02.2022 அன்று மாலை 6 மணியளவில் - மதுரை மாட்டுத்தாவணி எதிரில் உள்ள ராமசுப்பு அரங்கில் நடைபெற்றது. செந்தில்*




*குழுவினரின் பறையிசை - ஜாதி ஒழிப்பு நாடகங்கள் நிகழ்வின் தொடக்கத்தில் நடைபெற்றன. மோகன் - கோகிலா, விஜய் - வீரலட்சுமி, அமர் - நாகா, தமிழ் - சந்தியா உள்ளிட்ட ஜாதி மறுப்பு இணையர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள்.*

*இணையர்களுக்கு சிறப்பு அழைப்பாளர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கினார்கள். ஆதித்தமிழர் பேரவையின் நிறுவனத் தலைவர் அதியமான், திராவிடர் விடுதலைக் கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், தமிழ்ப் புலிகள் கட்சி தலைவர் நாகை திருவள்ளுவன், தமிழ் தேச மக்கள் முன்னணி தலைவர் மீ.த.பாண்டியன், அண்ணா திராவிட மக்கள் முன்னேற்ற கழகத் தலைவர் பசும்பொன் பாண்டியன், விடுதலை சிறுத்தைகள் கட்சி துணைப் பொது செயலாளர் கனியமுதன், தமிழ் தேசிய புலிப்படை கட்சி தலைவர் முத்து பாண்டி, தமிழக மக்கள் வாழ்வுரிமை பாதுகாப்பு கட்சித் தலைவர் மணி பாபா, தபெதிக மதுரை மாவட்ட அமைப்பாளர் கிட்டு ராசா, ஊடகவியலாளர் ‘யூடூ புருட்டஸ்’ மைனர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.*

*ஊடகவியலாளர் ‘யூடூ புருட்டஸ்’ மைனருக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது. நிகழ்விற்கு வில்லாபுரம் பகுதி பொறுப்பாளர் செந்தில் நாதன் வரவேற்புரை யாற்றினார். புறநகர் மாவட்ட தலைவர் மாளவிகா தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.*

*மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி, மேலூர் பொறுப்பாளர் சத்யமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் மா.பா. மணி அமுதன் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். புலிப்பட்டி பகுதி பொறுப்பாளர் கருப்பையா நன்றி கூறினார். மே 17 இயக்கம், புரட்சிகர இளைஞர் முன்னணி, கழக ஆதரவு வழக்கறிஞர்கள் உள்ளிட்டோர் திரளாக பங்கேற்றனர்.*

# கூடங்குளத்தில் அணுக்கழிவுகளை புதைக்காதே; ஒன்றிய அரசுக்கு கழகத் தலைவர் கண்டனம்

*கூடங்குளத்தில் அணுக்கழிவுகளை புதைக்கும் மையம் அமைக்கும் பணியை ஒன்றிய அரசு உடனடியாக கைவிட வேண்டும்; தமிழ் நாட்டு அரசு ஒன்றிய அரசின் இந்த நாசகார திட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி அணுசக்தி எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்*



*கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை:*

*தமிழ்நாட்டில் இந்திய ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி, கூடங்குளம் மக்களின் வரலாற்று சிறப்பு வாய்ந்த மாபெரும் போராட் டத்தையும் மதிக்காமல் கூடங் குளத்தில் இரண்டு அணு உலைகளை நிறுவி இயக்கிக் கொண்டு இருக்கிறது. அது மட்டும் அல்லாமல் மேலும் நான்கு உலைகளை நிறுவும் பணிகளை ஒன்றிய அரசு செய்து கொண்டு வருகிறது.*

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

## 7.5% உள் ஒதுக்கீடு: பா.ஜ.க.வின் பொய் முகம்

‘நீட்’ தேர்வை ஆதரிக்கும் பா.ஜ.க.வும் ‘சமூக ஆர்வலர்கள்’, ‘அரசியல் விமர்சகர்கள்’ என்ற முகமூடி களோடு தொலைக்காட்சி விவாதங்களில் பங்கேற்கும் “பிரம்மா”வின் தலையில் பிறந்ததாகக் கூறும் பூணூல் செல்லக் குழந்தைகளும், திரும்ப திரும்ப ஒரு வாதத்தை முன் வைக்கிறார்கள். 7.5 சதவீத அரசுப் பள்ளி மாணவர்களுக்கான இடஒதுக்கீட்டை தாங்கள் ஆதரிப்பதாகவும் அப்படி ஒரு யோசனையைக் கூறியதே பா.ஜ.க. தேசிய தலைவர் நட்டா தான் என்றும் கூறி வருகிறார்கள்; இது பச்சைப் பொய்.

7.5 சதவீத உள்ஒதுக்கீட்டை அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் கொண்டு வந்தது. சட்டமன்றத்தில் மசோதாவை நிறைவேற்றி ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பியபோது அப்போதும் ஆளுநராக இருந்த பன்வரிலால் புரோகித் கிடப்பில் போட்டார். உயர்ஜாதி ஏழைகளுக்கு 10 சதவீத இடஒதுக்கீட்டை அமுல்படுத்தினால் ஒப்புதல் தரத் தயார் என்று நிபந்தனை விதித்ததாக செய்திகள் வந்தன. பிறகு தமிழ்நாடு அரசே சட்டத்துக்கு பதிலாக அரசாணை பிறப்பித்தால் ஆளுநரிடம் போக வேண்டிய அவசியமில்லை என்றும் கலைஞர் கிராமப்புற மாணவர் இடஒதுக்கீட்டுக்கு அரசாணை தான் பிறப்பித்தார் என்றும் கருத்துகள் முன் வைக்கப்பட்ட நிலையில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, அரசாணை பிறப்பிக்கும் முயற்சிகளில் இறங்கியது. அரசாணை வரப் போகிறது என்பதை அறிந்த ஆளுநர் புரோகித், அவசர அவசரமாக சட்டமன்ற வரைவுக்கு ஒப்புதல் தந்தார்.

அது மட்டுமல்ல; புதுவையில் மாண்புமிகு நாராயணசாமி முதல்வராக இருந்தபோது காங்கிரஸ் ஆட்சி அரசுப் பள்ளி மாணவர்களுக்கு (நீட் தேர்ச்சி பெற்றவர்களுக்கு) 10 சதவீத உள்ஒதுக்கீடு வழங்கி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநர் கிரேன்பேடியின் ஒப்புதலுக்கு அனுப்பியது. ஆளுநர் இதில் தனக்கு உடன்பாடு இல்லை என்ற கருத்துடன் ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்து விட்டார். இந்த நிலையில் உள்ஒதுக்கீடு சட்டம் காலதாமதப்படுத்தப்படுகிறது என்று புதுச்சேரியைச் சார்ந்த மாணவி சுப்புலட்சுமி, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கு நீதிபதி புகழேந்தி முன் விசாரணைக்கு வந்தது.

வழக்கில் ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சக உயர் அதிகாரி இரவிரஞ்சன் அரசின் கருத்துகளை அரசுக் குறிப்பாக எழுதி அதை ஒன்றிய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஆர். சங்கர்நாராயணன் என்பவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். ஜன.23, 2021இல் தாக்கல் செய்யப்பட்ட அந்த மனு, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு உள்ஒதுக்கீடு தரக் கூடாது என்று திட்டவட்டமாக மறுத்தது.

புதுவை அரசுக்கு இப்படி ஒரு சட்டம் இயற்றும் அதிகார மில்லை என்று கூறிய ஒன்றிய ஆட்சி, கல்வி ஒத்திசைவுப் பட்டியலில் இருப்பதால் மாநிலங்கள் இதில் தலையிட முடியாது என்று கூறியது. அதுமட்டுமல்ல; ஒன்றிய ஆட்சி தாக்கல் செய்த மனுவில் உள்ள சொற்றொடர்களை அப்படியே தருகிறோம்:

“The introduction of ‘NEET’ in 2016 had been for merit based medical admission. NEET by providing uniform national standards follow the Principle of one ntion one merit. Thus a separate quota for the students of government schools, as proposed by the union territory cabinet **would dilute the merit of the NEET examination.**”

“ஒரே நாடு; ஒரே தகுதி என்ற நோக்கத்திற்காக ‘நீட்’ தேர்வு கொண்டு வரப்பட்டுள்ளதால் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தனி ஒதுக்கீடு வழங்குவது நீட் தேர்வு உருவாக்கும் ‘தகுதி’யை நீர்த்துப் போக வைத்து விடும்” என்பதே ஒன்றிய அரசு தந்த பதில்.

புதுச்சேரி ஒன்றிய அரசின் முடிவை ஏற்றுக் கொண்டால் வேறு பல மாநிலங்களும் அதேபோல் கோரிக்கைகளை வைக்கும்போது, தகுதிக்காகக் கொண்டு வரப்பட்ட ‘நீட்’ தேர்வின் நோக்கத்துக்கே எதிரானதாகி விடும் என்றும் ஒன்றிய அரசு கூறியது.

தமிழ்நாடு அரசு கொண்டு வந்த 7.5 சதவீத உள் ஒதுக்கீட்டையும் ஒன்றிய அரசு ஏற்கவில்லை என்பதையும் தெரிவித்து இருந்தது. ஒன்றிய அரசுக்கு ஏதும் இது குறித்து தெரிவிக்காமலே தமிழ்நாடு அரசு 7.5 சதவீத உள்ஒதுக்கீட்டை செய்திருக்கிறது என்றும் பதில் மனுவில் குறிப்பிட்டிருந்தது. நீதிமன்றத்தில் வாதிட்ட ஒன்றிய அரசு வழக்கறிஞர், மனுதாரர் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர் - ஒன்றிய அரசு - தமிழக அரசு கொண்டு வந்த 7.5 சதவீத உள்ஒதுக்கீட்டையும் சிறுமைப் படுத்துகிறது என்று வாதிட்டார். (The advocate argued that the Central Government had been belittling the 7.5% reservation adopted in Tamilnadu) (ஆதாரம்: ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு) என்று வாதிட்டார்.

இவ்வளவு உண்மைகளையும் குழிதோண்டி புதைத்துவிட்டு 7.5 சதவீத இடஒதுக்கீட்டை ஆதரித்து அண்ணாமலையும் அவரது சங்பரிவாரங்களும் பேசி வருவதோடு அது எங்கள் கட்சித் தலைவரின் மூளையில் உதித்த திட்டம் என்று கூறுகிறார்கள்.

‘ஒரே நாடு - ஒரே தகுதி’ என்பதற்காக வந்ததுதான் நீட். அதை எதிர்த்த அ.இ.அ.தி.மு.க. முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, ஒரே நாடு - ஒரே தேர்தல் முறையை இப்போது ஆதரிக்கிறார். அந்த அடிப்படையில் அடுத்த ஆண்டில் தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் வரவேண்டும் என்கிறார். கொள்கைகள் ஏதுமில்லாத ‘அதிகாரத்துக்கும் ஊழலுக்கும்’ ஆட்சியைப் பிடிக்கத் துடிப்பர்கள் இப்படித்தான் முரண்பாடு களில் சிக்கும் சந்தர்ப்பவாதிகளாக செயல்படுவார்கள்!

# நீட் ; ஓ.பி.எஸ் புரட்டுக்கு மறுப்பு

காங்கிரஸ் கட்சி 2012 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த போது முதன் முதலாக நீட் தேர்வு அரசிதழில் வெளியிடப்பட்டது. அப்போது சுகாதாரத்துறை இணை அமைச்சராக இருந்தவர் திமுகவைச் சார்ந்த காந்தி செல்வன் என்ற குற்றச்சாட்டைத் திரும்பத் திரும்ப கூறி வருகிறார்கள். ஓ.பன்னீர்செல்வமும் இதையே கூறி வருகிறார். இதன் வரலாற்றுப் பின்புலத்தை நாம் பார்க்க வேண்டும்.

காங்கிரஸ் ஆட்சி ஏன் நீட் தேர்வை கொண்டு வந்தது. உச்ச நீதிமன்றத்தில் 2009 இல் ஒரு வழக்கு வந்தது. 412 கல்லூரிகளில் 35 வகையான நுழைவுத் தேர்வுகள் நடத்தப்படுவதால் ஒரே மாதிரியான நுழைவுத் தேர்வு வர வேண்டும் என்று சிம்ரன் ஜெயின் என்பவரும் அவருடன் வேறு சிலரும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர உச்சநீதிமன்றம் மருத்துவக் கவுன்சிலுக்கு ஒரே தேர்வு முறையை உருவாக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. உச்சநீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் தான் 2010 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சி நீட் தேர்வு முறையைக் கொண்டு வர வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானது. அப்போது அந்தக் கூட்டணியில் இருந்த திமுக எதிர்த்தாலும், தமிழ்நாட்டில் நீட் தேர்வை நுழைப்பதற்கான வாய்ப்பு இல்லை. காரணம் 2006ஆம் ஆண்டே கலைஞர், கல்வியாளர் அனந்த கிருஷ்ணன் குழுவின் அறிக்கையைப் பெற்று திமுக ஆட்சியில் நுழைவுத் தேர்வுகள் சட்டப்படி சட்டமன்ற மசோதா மூலம் இரத்து செய்யப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் பெறப்பட்டுவிட்டது.

இந்த நிலையில் தமிழ்நாட்டிலும் நுழைவுத் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் சிலர் வழக்கு தொடர்ந்தனர். சென்னை உயர்நீதிமன்றம் அதற்கு மறுத்து, மாநில அரசினுடைய உரிமை என்று கூறிவிட்டது. பிறகு உச்சநீதிமன்றம் சென்றார்கள், உச்சநீதி மன்றம், ’மருத்துவக் கவுன்சிலுக்கு நீட் தேர்வு முறையை உருவாக்குவதற்கே உரிமையில்லை’ என்று கூறிவிட்டது. அத்துடன் காங்கிரஸ் ஆட்சி இந்தப் பிரச்சனையை மூடி சமாதிக்கு அனுப்பிவிட்டது.

பிறகு, பாஜக ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தான் 2016 ஆம் ஆண்டு மருத்துவக் கவுன்சில் வழியாக உச்ச நீதிமன்றத்திற்கு மனு போட்டு, அவசர சட்டம் பிறப்பித்து நீட் தேர்வு முறையை இந்தியா முழுவதும் அமுல்படுத்தியது.

இப்போது,அதிமுக, திமுக ஆட்சியிலும் நாம் கேட்பது தமிழ்நாட்டிற்கு மட்டும் விதி விலக்கு தான். இந்திய ஒன்றியம் முழுவதும் ஒழிக்க வேண்டும் என்பது அல்ல. காங்கிரஸ் ஆட்சி கொண்டு வந்த நீட் தேர்வு இந்தியா முழுவதும் கொண்டு வந்தது. ஆனால் தமிழ்நாட்டிற்கு அப்போது விதிவிலக்கு இருந்தது.

எனவே இந்தியா முழுவதும் நீட் தேர்வை ஏன் திமுக எதிர்க்கவில்லை என்று இப்போது ஓ.பன்னீர்செல்வம் கேட்பது அர்த்தமற்ற கேள்வி, இதே ஓ.பன்னீர்செல்வம் தான் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தில் தமிழ் தெரியாதவர்களும் தேர்ச்சி பெறலாம் என்று விபரீத ஆணையை பிறப்பித்து, பிற மாநிலத்துக்காரர்கள் தமிழ்நாட்டில் நுழையலாம் என்று ஏற்பாடு செய்து தமிழர்களின் வேலை வாய்ப்புகளை பா.ஜ.க. மிரட்டலுக்கு பணிந்து வடநாட்டுக்காரர்களுக்கு திறந்து விட்டவர்; தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு தான் தமிழில் தேர்ச்சி பெற்றவர்களே தேர்வாணையத்தின் வழியாக தேர்வு செய்யப்படுவார்கள் என்ற புதிய விதிகளை உருவாக்கியது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## சங்கிகளின் தேசபக்தி அரசியலை கிழித்தெறிந்த முதலமைச்சர்


தூத்துக்குடி தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் (காணொளி), பிரதமர் மோடிக்கு பதிலளித்து பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு மிக மிக நுட்பமான, ஆழ்ந்த சிந்தனைக்கும், பரிசீலனைக்கும் உரியது என்பதை நாம் சுட்டிக்காட்ட வேண்டும். அதற்கு முன்னால் சிறு விளக்கத்தை கூற விரும்புகிறோம்.

தேசம், தேசபக்தி என்ற சொல்லாடல்களை மதவாதத்திற்கு பாஜகவும், சங் பரிவாரங்களும் பயன்படுத்துகின்றன. இந்திய தேசபக்தியை இந்துவிலிருந்து பிரிக்க முடியாது. இந்துவாக இருப்பது தான் இந்தியன் என்பதற்கான அடையாளம். இந்து என்று தங்களை அடையாளபடுத்திக் கொள்ளாதவர்கள் இந்தியாவிற்கு அந்நியர்கள். இதுதான் ஆர்.எஸ்.எஸ்சின் சித்தாந்தம், பாஜகவின் கொள்கை. அதனால் தான் அவர்கள் அகண்ட பாரதத்தை ஒரு காலத்தில் பேசினார்கள். இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், பர்மா, ஆப்கானிஸ்தான், இலங்கை என்று அத்தனை நாடுகளைக் கொண்ட அகண்ட பாரதத்தை அமைக்க வேண்டும் என்று எல்லையை வரையறுத்து இந்து மதத்தை அவர்கள் எல்லைக்குள் திணித்தார்கள். இப்போது நாடுகள் பிரிந்த பிறகு அந்த முழக்கத்தை அப்படியே ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் அவ்வளவு தான்.

ஆனால், தேச பக்தியையும், மதத்தையும் இணைத்துப் பார்க்கிற அவர்களுடைய சிந்தனை போக்கில் எந்த வித மாற்றமும் இல்லை. நாடாளுமன்றத்தில் ராகுல் காந்தி ஒரு கருத்தை வெளியிட்டார். தமிழ்நாட்டில் ஒரு காலத்திலும் பாஜக ஆட்சியை பிடிக்க முடியாது என்று இராகுல் காந்தி பேசினார். இதற்கு மோடி நாடாளுமன்றத்தில் என்ன பதிலை கூறினார்? அதைத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் தூத்துக்குடி தேர்தல் பிரச்சாரத்தில் சுட்டிக்காட்டினார். முதலமைச்சர் பேச்சு இப்படி இருக்கிறது. அதை அப்படியே குறிப்பிடுகிறோம்: “எத்தனை ஆண்டுகள் ஆனாலும் பாஜக தமிழகத்தில் ஆட்சியை பிடிக்க முடியாது என்று இராகுல் காந்தி கூறினார். இதற்கு பதிலளித்த மோடி தமிழ்நாட்டு மக்கள் தேசிய உணர்வு கொண்டவர்கள். மறைந்த முப்படை தளபதிக்கு வீரவணக்கம் செலுத்தியது தமிழ்நாடு என்று மோடி பதில் கூறியிருக்கிறார். இந்த பதிலின் வழியாக பாஜக வை விமர்சிப்பதையே இந்தியாவை விமர்சிப்பதாக அவர் வெளிப்படுத்துகிறார்” என்று மிக நுட்பமான பதிலை முதலமைச்சர் வழங்கி இருக்கிறார். பா.ஜ.க. என்ற அரசியல் கட்சிகள் இந்தியாவின் தேசபக்தியோடு இணைந்திருக்கிறது. பா.ஜ.க.வை எதிர்ப்பது இந்தியாவையும் தேசப் பக்தியையும் எதிர்ப்பது என்ற பேட்டியின் மோசடி கருத்தை முதல்வர் அம்பலப்படுத்தியிருக்கிறார்.

முதலமைச்சர் மேலும், “தேசம் என்று கூறியிருக்கிறார்களே, எது தேசம் ? என்பது தான் அவர்களுக்கும் நமக்குமான பிரச்சனை. வெறும் நிலப்பரப்பு தான் தேசம் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இல்லை இந்த மண்ணில் வாழும் மக்கள் தான் தேசம் என்று நாம் கூறுகிறோம். இந்த மண்ணையும், மக்களையும் புரிந்து கொள்ளாதவர்களாக, மதிக்காதவர்களாக, எதிராக செயல்படுபவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். பல்வேறு இனமும், மொழியும், பண்பாடும் கொண்டது தான் இந்தியத் துணைக் கண்டம் என்கிறோம் நாம். இந்த நாட்டை பல்வேறு அழகிய மலர்களைக் கொண்ட பூங்கொத்தாக பார்க்கிறோம். ஆனால் அப்படி அவர்கள் பார்க்காமல், இந்த தேசத்தை வெறும் நிலத்தால் ஆன தேசம் என்று மட்டுமே பார்க்கிறார்கள்” என்று தமிழ்நாட்டு முதலமைச்சர் மிக நுட்பமாக பாஜக பாசிச கருத்தியலை புரிந்து கொண்டு திராவிடர் இயக்கத்தின் பார்வையில், மண்ணின் ஒருமைப்பாடா ? மக்களின் ஒருமைப் பாடா ? மக்களின் ஒருமைப்பாட்டிற்குத்தான் மண்ணின் ஒருமைப்பாடு என்ற தத்துவத்தை மிக அழகாக விளக்கி இருக்கிறார் முதலமைச்சர்.

### அறிவை அலட்சியப்படுத்தும் காதல் போதாது..



வாழ்க்கைத் துணை விஷயத்தில் காதல் போதாது. அறிவு, அன்பு, பொருத்தம், அனுபவம் ஆகிய பல காரியங்களே முக்கியமானவையாகும். பழங்காலத்தில் காதலே போதுமானதாக இருக்கலாம். அப்போதைய அறிவுக்கு அவ்வளவுதான் தேவையாக இருந்திருக்கும். அது மனித வாழ்வையும் பிறவிக் குணங்களையும் மேன்மைப் படுத்துவதாக இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இச்சையின் பெருக்கம் தான் பெரிதும் காதலின் முழு இடத்தையும் பெற்றுவிடுகிறது. மற்ற பல வாழ்க்கை வேறுபாடுகளுக்கு அந்த இச்சைப் பெருக்கம் இருவருக்கும் போதவே போதாது. ஆகையால் அறிவையும் நிகழ்ச்சிப் பயனையும் அலட்சியப்படுத்தும் காதலை மனிதன் அடக்கி, வாழ்க்கைத் தன்மையைக் கொண்டு வாழ்க்கைத் துணையைப் பொருத்திக் கொள்ள வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

- குடி அரசு - 10.01.1948

# பெரியாரியலுக்கு – ஒரு வரலாற்று ஆவணம் (1)

**விடுதலை இராசேந்திரன்**

*ப. திருமாவேலன், ‘இவர்தமிழர் இல்லை என்றால் எவர் தமிழர்?’ – தொகுப்பு நூல் குறித்த ஒரு பார்வை.*


ப. திருமாவேலன் இரண்டு தொகுதிகளாக 1579 பக்கங்களுடன் வெளி வந்திருக்கிற நூல் “இவர் தமிழர் இல்லை என்றால் எவர் தமிழர்?” என்ற ஆவணம், பெரியார் மீது அவதூறுகளை அள்ளி வீசுவோர்க்கு பதில் தருவதே இந்த நூலின் நோக்கம் என்று நூலாசிரியர் ப. திருமாவேலன் கூறினாலும் நூலின் உள்ளடக்கத்தை அப்படிச் சுருக்கி விடக் கூடாது. பெரியார் சிந்தனை மற்றும் தத்துவங்களுக்கான ஒரு வரலாற்று ஆவணமாக இது வெளி வந்திருக்கிறது என்றே கூற வேண்டும். ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், கவிஞர்கள் படைக்கும் நூல்களைவிட பத்திரிகையாளர் எழுதும் நூல்கள் மக்களிடம் கருத்துகளைக் கொண்டு சேர்ப்பதில் பெரும் வெற்றி பெற்று விடுகின்றன என்பது எனது கருத்து. மக்கள் மனதில் நியாயமாக எழக்கூடிய கேள்விகளைப் புரிந்து அவர்களுக்கான மொழிகளில் விளங்க வைக்கும் எழுத்துத் திறன் பத்திரிகையாளர்களுக்கு உண்டு. ப. திருமாவேலன் பத்திரிகைத் துறையில் சிறந்த செய்தியாளராக, பத்திரிகை ஆசிரியராக நீண்டகால நீண்ட அனுபவம் நிறைந்தவர். வெகு மக்களுக்கான பத்திரிகைகளிலும் இயக்கங்களின் இலட்சியப் பத்திரிகைகளிலும் பணியாற்றியவர். எந்த நிலையிலும் தனது பெரியாரியல் அடையாளத்தோடு சமரசம் செய்து கொள்ளாத நேர்மையாளர். இந்த நூலின் உள்ளடக்கம் அதற்காக தேர்வு செய்த தலைப்புகளே இதை உணர்த்துகிறது. பல ஆண்டு காலம் கடுமையாக உழைத்து ‘குடிஅரசு’, ‘விடுதலை’, ‘உண்மை’ பத்திரிகைகளைப் படித்து, பல்வேறு அறிஞர்களின் வரலாற்று நூல்களைப் படித்து ஏராளமான செய்திகளை குவித்துத் தந்திருக்கிறார். தமிழறிஞர்களின் பல வரலாற்று நூல்களை அறிமுகம் செய்திருக்கிறார். காலத்தின் தேவையாக இந்த ஆவணத்தை தமிழ் வாசகர்களுக்கு அர்ப்பணித் திருக் கிறார்.

பெரியார் மீது பொறுப்பற்ற அவதூறுகளை சிலர் வீசுவதுகூட ஒரு கண்ணோட்டத்தில் வரவேற்கப்பட வேண்டியதுதான். இந்த எதிர்ப்புகளால் தான் பெரியாரியலுக்கு இப்படி ஒரு வரலாற்று ஆவணம் கிடைத்திருக்கிறது.

முதல் தொகுதி - பெரியார் தமிழ் மொழிக்காக நடத்திய போராட்டங்கள்; தமிழ்மொழி வளர்ச்சிக்கு அவர் முன் வைத்த கருத்துகள்; நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டங்களை விரிவாக விளக்குவதோடு பெரியாருக்கும் தமிழ்ப் புலவர்களுக்கு மிடையே இருந்த நட்பு உரையாடல்கள் குறித்து ஏராளமான தகவல்களை திரட்டித் தந்திருக்கிறது. பெரியாரைப் போற்றிய பெரும் புலவர்கள், பெரியார் போற்றிய தமிழ்ப் பெரியார்கள், பெரியாருடன் இயைந்து வாழ்ந்த பத்து ஆளுமைகள், பெரியாருடன் இணைந்து பணித்த அய்ம்பது புலவர்கள் என்று நான்கு தலைப்புகளில் பெரியார் மற்றும் அவருடன் உறவிலிருந்த தமிழறிஞர்களின் எழுத்துகளிலிருந்தே எடுத்துக் காட்டி விளக்குகிறார் நூலாசிரியர். இதில் நூலாசிரியர் தனது கருத்துகளைத் தவிர்த்து ஆவணங்களிலிருந்தே பதிவுகளை சான்றுகளாக்கி யிருப்பது தான் நூலின் தனித்துவமான சிறப்பு.

தமிழ்ப் பெரியார்களை பெரியார் போற்றிப் பாராட்டி, ‘குடிஅரசு’ இதழ்களில எழுதியவைகளி லிருந்து 40 ஆதாரங்களை எடுத்துக் காட்டி யிருக்கிறார்.

அதில் ஒருவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார். மிகச் சிறந்த தமிழ் அறிஞர். தமிழ்த் தேர்வில் அக்காலத்தில் மிக உயர் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றவர். திருவாடுதுறை மடம், உயர் மதிப்பெண் பெறுவோருக்கு ரூ. 1000 பரிசுத் தொகை வழங்கும் திட்டம் ஒன்றை செயல்படுத்தி வந்தது. ஆனால் ‘தெ.பொ.மீ.’ பார்ப்பனரல்லாதவராக இருந்த காரணத்தால் நியாயமாக அவருக்குக் கிடைக்க வேண்டிய பரிசுத் தொகை மறுக்கப்பட்டு, ‘பார்ப்பனரல்லாதார் துவேஷத்தோடு’ உ.வே. சாமிநாதய்யருக்கு வழங்கப்பட்டது என்று பெரியார் கண்டித்தார். இத்தனைக்கும் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் அண்ணன் தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் என்பவர் அந்தக் காலத்தில் சுயமரியாதை இயக்கத்தையும் பெரியாரையும் மிகவும் இழிவு படுத்திப் பேசியவர்; எழுதியவர்; அதற்காகவே பத்திரிகை நடத்தியவர். காங்கிரஸ் கட்சி அவருக்கு ரூ.2000 மாத ஊதியம் தந்து பெரியார் இயக்கத்தைத் தாக்கி எழுத வைத்தது. திரு.வி.க.வின் ‘ஆன்மீகத்தில்’ பெரியாருக்கு மாறுபாடு உண்டு. ஆனாலும் அவரது தமிழ்த் தொண்டைப் பெரியார் பெரிதும் புகழ்கிறார். அவர் நடத்திய நவசக்தி, தேசபக்தன்




- **பெரியார் தமிழ்ப் புலவர்களை இனம் சார்ந்து அரவணைத்தார்.**
- **அவர்கள் இருட்டடிப்புக்குள்ளாக்கப் படுவதைக் கண்டு வருந்தினார்.**
- **தமிழறிஞர்களின் அறிவாற்றலை மனந்திறந்து பாராட்டினார்.**
- **தமிழ் நூல்களை தனது ‘குடிஅரசு’ ஏட்டில் அறிமுகப்படுத்தினார்.**

பத்திரிகைகளைப் படித்துத் தான் நான் தமிழ் எழுதவே கற்றுக் கொண்டேன். நான் தமிழ் பேசுவதும், எழுதுவதும் தமிழ்க் கொலை தான் என்று சுய விமர்சனம் செய்யும் பெரியார், திரு.வி.க.வின் எழுத்துகளைப் படித்தே பத்திரிகையில் எழுத லானேன்; 50 நூல்களையும் எழுத முடிந்தது என்கிறார்.

1938இல் கடற்கரையில் நடந்த இந்தி எதிர்ப்புப் கூட்டத்தில் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற முழக்கம் முன் வைக்கப்பட்டது. அது தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த முழக்கம் என்று எழுதிய ‘குடிஅரசு’ ஒரு சான்றை முன் வைத்தது. தலைமை ஏற்ற மறைமலை அடிகள் மதவாதியின் பிரதிநிதி; பேசிய சோமசுந்தர பாரதியார் காங்கிரஸ் பிரதிநிதி; பேசிய ஈ.வெ.ராமசாமி, பகுத்தறிவாளர்களின் பிரதிநிதி. எனவே தமிழ்நாடு தமிழருக்கே என்பது மிழ் நாட்டின் ஒருமித்த முழக்கம் என்று எழுதியது ‘குடிஅரசு’.

தமிழறிஞர்களிடம் பெரியார் எந்த அளவு நன்மதிப்பு கொண்டிருந்தார்?

“மதங்களைப் பற்றிய நமது கருத்துகளுக்கு எதிராக இடையூறு செய்பவர்களுக்கு எதிர்வாதம் புரிவோருக்கு சுயமரியாதை உணர்வுடைய நமது தமிழறிஞர்கள் மறைமலையடிகள், கா.சுப்ரமணியம் பிள்ளை, திரு.வி.க. போன்றவர்கள், இதற்கு ஆராய்ச்சிபூர்வமாக பதில் தந்து நமக்கு ‘பின்புலமாய்’ இருக்கிறார்கள் என்ற துணிவில் அவர்களை மலைபோல் நம்பி இருக்கிறோம்” என்ற அளவுக்கு பெரியார் எழுதி பெருமைப்படுத்தினார்.

பொன்னம்பலனார் நடத்திய ‘சண்டமாருதம்’ பத்திரிகையை ஆதரித்து அந்த ஏட்டுக்கு சந்தாதாரர் ஆக வேண்டும் என்று பெரியார் வேண்டுகோள் விடுத்தார். பொன்னம்பலனார் சைவ சித்தாந்த அழுக்கு மூட்டையாக ருத்திராட்ச மாலை அணிந்து கொண்டு தேவாரம், திருவாசகம், வடலூர் இராம லிங்கனார் பாடல்களை கண்களில் நீர் ஒழுக தேம்பித் தேம்பி அழுது கொண்டே பாடிக் கொண்டிருந்தவர். இப்போது சுயமரியாதைக் கொள்கையின் பக்கம் திரும்பி ‘சண்டமாருதமாக’ எதிரிகளைத் தாக்கி வருகிறார் என்று எழுதினார் பெரியார்.

அக்காலத்தில் வெளி வந்த தமிழ் நூல்கள், அறிஞர்களின் தமிழ் பத்திரிகைகளை ‘குடிஅரசு’ வரவேற்று எழுதி உற்சாகப்படுத்துவதை வழக்க மாக்கிக் கொண்டிருந்தது. பண்டிதர் ஆனந்தம் எழுதிய ‘பாலர் பரிணாமம்’, ராமச்சந்திர செட்டியார் எழுதிய ‘இளைஞர் பாடல்கள்’, தெ.பொ.மீ. மற்றும் தேவநேயன் எழுதிய கால்டுவெல்லின் “ஒப்பியன் மொழி இலக்கணம்”, மாணவர் சிவப்பிரகாசம் எழுதிய புறநானூற்று வீரப் பாடல்கள், புலவர் குழந்தையின் ‘இராவண காவியம்’, அப்பாத்துரையாரின் ‘வருங்காலத் தமிழகம்’, அண்ணல் தங்கோவின் இதழான ‘தமிழ்நாடு தமிழருக்கே’, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இலக்கியப் படைப்புகள் என்று ஏராளமான தமிழ் நூல்களை, இதழ்களை வரவேற்றுப் பாராட்டியது பெரியாரின் ‘குடிஅரசு’. திராவிடத்தையும் பெரியாரியலையும் கடுமையாக எதிர்த்த ம.பொ.சிவஞானம் (ம.பொ.சி.) தொடங்கிய ‘தமிழ் முரசு’ மாத இதழையும் பெரியார் வரவேற்று பலரும் படித்துப் பயன் பெற வேண்டும் என்று எழுதினார். “ம.பொ.சிவஞான கிராமணியார், காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவரெனினும் தேசியத்தால் தமிழர்களுக்கும் தமிழ் மொழிக்கும் வந்த இடையூறுகளை வன்மையாகக் கண்டிக்கிறார்” என்று பதிவு செய்திருக்கிறார் பெரியார் (குடிஅரசு 13.7.1946). மாறுபட்ட முகாம்களிலிருந்து தமிழ் - தமிழருக்கு ஆதரவுக்குரல் வந்தாலும் ஓடிச் சென்று அரவணைத்திருக்கிறார் பெரியார்.

பெரியாருடன் இயைந்து வாழ்ந்த பத்து ஆளுமைகள் என்ற மூன்றாவது அத்தியாயம் வ.உ.சி., மறைமலையடிகள், திரு.வி.க., நாவலர் சோமசுந்தர பாரதியார், பாரதிதாசன், கி.ஆ.பெ. விசுவநாதம், இலக்குவனார் தேவநேயப் பாவாணர், அண்ணல் தங்கோ, குன்றக்குடி அடிகளார் ஆகியோருடன் பெரியாருக்கு இருந்த நெருக்கமான உறவுகளை விரிவாக அலசுகிறது. அத்தனையும் பெரியார் எழுத்து, தலைவர்களின் வரலாற்று நூல்களிலிருந்து மேற்கோளாக எடுத்தாளப்பட் டிருக்கின்றன.

பெரியாரோடு முதலில் உடன்பட்டு பிறகு மாறுபட்டு விலகியவர்கள் இறுதி காலத்தில் பெரியார் தொண்டின் மகத்தான தனித்துவத்தை அங்கீகரித்து பாராட்டியே மறைந்திருக்கிறார்கள். குறிப்பாக ‘திராவிடர் கழகம்’ என்று பெயர் சூட்டுவதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்து ‘தமிழர்க் கழகம்’ என்று பெயர் சூட்ட வலியுறுத்திய அண்ணல் தங்கோவை குறிப்பிட வேண்டும். சில தமிழ்த் தேசியங்கள் பெரியாருக்கு எதிராக அண்ணல் தங்கோவை உயர்த்திப் பிடிக்கிறார்கள். ‘திராவிட நாடு’ என்ற சொல்லை அண்ணல் தங்கோ இறுதி வரை உறுதியாக எதிர்த்தாரே தவிர, திராவிட இயக்கக் கொள்கைகளில் அவர் பற்றுக் கொண்டிருந்ததோடு, பெரியார், அண்ணா, கலைஞர் என்று திராவிட இயக்கத் தலைவர்களுடன் நெருக்கமும் உறவும் கொண் டிருந்தார்.

பெரியார் மறைவுக்கு முன் வேலூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது அண்ணல் தங்கோவும் அதே மருத்துவமனையில் உடல்நலம் பாதிக்கப்பட்டு, சேர்க்கப்பட்டிருந்தார். பெரியாரை நேரில் சந்திக்க அவர் மிகவும் வற்புறுத்திய நிலையில், நடமாட முடியாத நிலையிலிருந்த அண்ணல் தங்கோவை மருத்துவர்கள் அனுமதிக்கவில்லை. பெரியார் மறைவுச் செய்தி கேட்டு கண்கலங்கினார். 1968இல் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில் அண்ணாவின் அழைப்பை ஏற்று கலந்து கொண்டார். பராசக்தி படத்தில் இறுதியாக வரும் “எல்லோரும் வாழ வேண்டும்; உயிர்கள் இன்புற்றிருக்க வேண்டும்” என்ற பாடல் அண்ணல் தங்கோ எழுதியதுதான் என்று கலைஞர் ‘முரசொலி’ ஏட்டில் (17.1.2004) பதிவு செய்திருக்கிறார். 2006ஆம் ஆண்டு குடியாத்தம் தேர்தல் பொதுக் கூட்டத்தில் பேசிய கலைஞர், “தனித் தமிழைப் பரப்புவதற்காக அரும்பாடுபட்ட அண்ணல் தங்கோ வாழ்ந்த ஊர் இந்த ஊர். அவரும் நானும் குடியாத்தம் ஆற்று மணலில் நடந்த பொதுக் கூட்டங்களில் பலமுறை பேசியிருக்கிறோம்” என்று நினைவு கூர்ந்தார்.

திராவிடர் கழகத்திலிருந்து அவர் 1944இல் விலகினாலும் உறவைத் துண்டித்துக் கொள்ள வில்லை. பெரியார் தமிழினத்தை சீரழித்தார் என்று சேறுவாரித் தூற்றவில்லை. 1952இல் அவர் எழுதிய “மும்மூர்த்திகள் உண்மை தெரியுமா?” என்ற நூலைப் படித்தால் பெரியார் மீதும் திராவிடர் இயக்கத் தலைவர்கள் மீதும் அவர் கொண்டிருந்த பற்றையும் மதிப்பையும் உணர முடியும். “தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி, தனது தளர்ந்த வயது முதிர்ந்த காலத்திலும் இரவென்றும் பகலென்றும் காலையென்றும் பிறவென்றும் கருதிப் பார்க்காமல் இன்றைக்குத் தான் இருபது ஆண்டு நிறைவுப் பெற்ற இளங்காளைத் தமிழ்மகன் போல் துணியை இழுத்திழுத்துக் கட்டிக் கொண்டு இளைஞர்கள் யாம் என்பார்கூட வெட்கப்படும்படி ஒரு சிறிதளவும் ஓயாது உட்காராது ‘உசு’ என்று படுக்காது, வாழ்க்கைத் துணை நாடிச் சாயாது, தனி வண்டி, தனி வகுப்பு நாடாது, ஆரியத்தைப் பார்ப்பனியத்தை - காந்தியத்தை - கடவுளியத்தைச் சமய வலைச் சிக்கலை இவைகளால் உண்டாகும் தொல்லைகளை எதிர்த் தெரித்துப் போராடி வரும் பேராண்மையாளர்” என்று பெரியாரைப் பற்றி உணர்ச்சி வரிகளால் தனது நூலில் எழுதியவர்தான் அண்ணல் தங்கோ. ‘தமிழர் கழகம்’ என்ற பெயர் சூட்ட வேண்டும் என்ற கருத்தைத் தவிர அவர் திராவிடர் கழகத்தைத் தூற்றவில்லை; ‘திராவிடர்’ என்று பேசியவர்களை பிராண்டவில்லை.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு முதலிடம்; ஒன்றிய ஆட்சியின் நிதி ஆயோக் கூறுகிறது

தமிழ்நாட்டை திராவிட ஆட்சி சீர்குலைத்துவிட்டது என்று சில தமிழ்த் தேசிய அமைப்புகளும், கழகங்கள் இல்லா தமிழ்நாட்டை உருவாக்குவோம் என்று பாஜகவினரும் பேசி வருகின்றனர். இதற்கு பதிலடி தருகின்ற வகையில் ஒன்றிய ஆட்சியின் நிதி ஆயோக் என்ற அமைப்பு, இந்தியாவிலேயே வறுமை ஒழிப்பிலும், வளர்ச்சியிலும் தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்று நிற்கிறது என்று அண்மையில் வெளியிட்ட மூன்றாவது அறிக்கையில் கூறி இருக்கிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பல்வேறு ஆய்வாளர்கள் எழுதிய கட்டுரையை நிதி ஆயோக் அமைப்பு தன்னுடைய அறிக்கையில் பதிவு செய்து இருக்கிறது. இன்றைய இந்து ஆங்கில நாளேட்டில் பிப்ரவரி 11,2022 இது குறித்து வெளிவந்த கட்டுரையின் சுருக்கமான கருத்துக்களை கீழே தருகிறோம்.

நிதி ஆயோக் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள தகவல்கள்.

1) வறுமை ஒழிப்பில் கேரளா, ஆந்திரா மாநிலங்களை பின்னுக்குத் தள்ளிவிட்டு தமிழ்நாடு மூன்று புள்ளிகள் கூடுதலாக பெற்று முதலிடத்தில் நிற்கிறது. கேரளா 83, தமிழ்நாடு 86 புள்ளிகள்.

2) திட்டங்களை சிறப்பாக அமுல்படுத்தக்கூடிய மிகச்சிறந்த நிர்வாக கட்டமைப்புகள் மாவட்ட அளவில் தமிழ்நாட்டில் வலிமையாக இருப்பதே இதற்கு காரணம் என்று கேரள அரசின் முன்னால் தலைமைச் செயலாளரும், இப்போது கேரள நிதி ஆணையத்தின் தலைவராக இருப்பவரும் ஒன்றிய ஆட்சியில் ஊரக வளர்ச்சித் துறையில் பணியாற்றியவருமான எஸ்.எம் விஜயானந்த் எழுதிய கட்டுரையில் கூறுகிறார்.

3) மாநில அரசின் திட்டங்கள் மட்டுமின்றி ஒன்றிய அரசின் திட்டங்களும் மிகத் திறமையாக தமிழ்நாட்டில் அமுலாக்கப்படுகின்றன. உள்ளூர் மட்டத்தில் தரவுகளை திரட்டும் தமிழ்நாட்டின் நிர்வாக கலாச்சாரம் இந்த வெற்றிக்கு மிகவும் உதவுகிறது என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

4) மகாத்மா காந்தி கிராமப்புற வேலைத் திட்டம் தமிழ்நாட்டில் எப்படி செயல்படுகிறது என்று 12 மாவட்டங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு காந்தி கிராம பல்கலைக்கழக பேராசிரியர் பி.ரகுபதி ஒரு ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டு இருக்கிறார். கொரோனா காலத்தில் இத்திட்டம்தான் உணவு கிடைப்பதற்கு மிகவும் பாதுகாப்பாக இருந்தது என்று கூறுகிறார். இத்திட்டத்தில் பங்கு பெறுவோர் பெரும்பாலானோர் பெண்கள், இதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு தங்களது குடும்பத்தின் உணவுத் தேவையை பூர்த்தி செய்து கொண்டனர் என்றும் முதியவர்கள், உடல் நலம் குறைந்தோர், ஊனமுற்றோருக்கு கொரோனா காலத்தில் தனி கவனம் தமிழ்நாட்டில் செலுத்தப்பட்டது என்றும் அந்த ஆய்வு கூறுகிறது.

5) கேரள முன்னால் தலைமைச் செயலாளர் விஜயானந்த் தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களின் மிகச் சிறப்பான பங்களிப்பை சுட்டிக்காட்டுகிறார். வறுமைப் பிடியில் இருப்பவர்களை கண்டெடுப்பதிலும் அவர்களை அதிலிருந்து மீட்டெடுப்பதிலும் இந்த சுய உதவிக் குழுக்கள் மிகப் பெரும் பங்காற்றியிருக் கின்றன. அது பாராட்டத்தக்க பங்கு என்று அவர் பதிவு செய்து இருக்கிறார்.

6) தமிழ்நாட்டில் அமுல்படுத்தப்பட்டு வரும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள் பின்தங்கிய விளிம்பு நிலை மக்களை நோய்த் தொற்றுகளிலிருந்து காப்பாற்றி யதில் பெரும் பங்காற்றியிருக்கிறது என்று விஜயானந்த் சுட்டிக்காட்டுகிறார்.

7) தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்டம் குறிப்பாக இலவச அரிசித் திட்டம் வறுமை ஒழிப்பில் மிகப் பெரும் பங்காற்றியதை தமிழ்நாட்டின் நிதித் துறைச் செயலாளராக இருந்து ஓய்வு பெற்ற கே.சண்முகம் தன்னுடைய ஆய்வுக் கட்டுரையில் சுட்டிக்காட்டுகிறார்.

பொருளாதாரத் துறையில் மட்டுமின்றி சமூக நலன் மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களை மக்களிடம் கொண்டு சென்றதில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதோடு மாநில கல்வித் துறை பள்ளிக்குச் செல்லாத ஆயிரக்கணக்கான குழந்தைகளை, பள்ளிக்குக் கொண்டு வருவதில் மாவட்ட நிர்வாக அமைப்புகளோடு இணைந்து மகத்தான பங்களிப்பை வழங்கி இருக்கிறது. என்று கோடிட்டு காட்டுகிறார்.

அதே நேரத்தில் தமிழ்நாட்டில் ஊட்டச்சத்து குறைபாடு, துப்புரவுத் துறைகளில் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது என்றும் முன்னால் நிதித்துறை செயலாளர் கே. சண்முகம் கூறுகிறார்.

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிதி ஆயோக், தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது என்று அறிக்கை வெளியிடுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் பாஜகவினரும், சில தமிழ்த்தேசிய அமைப்புகளும் திராவிட இயக்கத்தை எந்தத் தரவுகளும் இன்றி குற்றக் கூண்டிலே நிறுத்துவதில் கவனமாக இருக்கிறார்கள். மக்கள் சிந்திக்க வேண்டும்.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அணு உலைகளே மிகவும் ஆபத்தானவை என உலகின் அறிவியல் தொழில் நுட்ப விஞ்ஞானத்தில் உச்சங்களைத் தொட்ட ரஷ்யா ஜெர்மன் ஜப்பான் போன்ற நாடுகளே அத்திட்டங்களைக் கைவிட்டு விட்டன. ஆனால் அணு உலை அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி இல்லாமல் ரஷ்ய நாட்டிடம் தொழில் நுட்பம் பெற்று இந்திய ஒன்றியத்தில் அதுவும் நம் தமிழ்நாட்டில் அணுஉலைகளை அமைத்திருப்பது பெரும் ஆபத்து என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தமிழ் நாட்டின் தலைவர்கள் அச்சம் தெரிவித்துக் கொண்டு இருக்கும் அதே நேரத்தில் அணு உலைகளைவிட மிகவும் ஆபத்தான கதிரியக்க வீச்சு தன்மைகொண்ட அணு உலைக் கழிவுகளை தமிழ்நாட்டில் அதுவும் கூடங்குளம் அணு உலைகளுக்கு அருகாமை யிலேயே புதைப்பது என்று இந்திய ஒன்றிய அரசு முடிவெடுத்து அதற்கான பணிகளை துவங்கியிருக்கிறது. இது தமிழ்நாட்டிற்கு மிக மிக ஆபத்தான ஒன்றாகும்.

அணு உலைக் கழிவுகளை எப்படி பாதுகாப்பாக அப்புறப்படுத்துவது என்று உலக நாடுகளே தீர்வு காணமுடியாமல் மிகப்பெரிய சிக்கலில் இருக்கும் நிலையில் தமிழ்நாட்டில் அவற்றை புதைப்பது என்பது தமிழ்நாட்டிற்கு இழைக்கப்படும் மாபெரும் தீங்கு.

கதிரியக்க வீச்சு கொண்ட அணுவுலைக் கழிவுகளின் ஆபத்தை உணர்ந்து ஒன்றியத்தில் உள்ள பிற மாநிலங்கள் அணுக் கழிவுகளை அங்கு புதைப்பதற்கு ஒன்றிய அரசு எடுத்த முடிவை கடுமையாக எதிர்த்து அணுக் கழிவுகளை தங்கள் மாநிலங்களில் புகைக்க விடாமல் தடுத்து விட்டனர்.

உதாரணத்திற்கு கர்நாடக மாநிலம் கோலார் தங்க வயலில் கைவிடப்பட்ட சில கிலோமீட்டர்கள் ஆழமான சுரங்கபகுதிகளில் இந்த அணு உலைக் கழிவுகளை புதைப்பதற்கான யோசனை இருப்பதாக ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்தது. யோசனை இருப்பதாக தெரிவித்ததற்காகவே கர்நாடக அரசு இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. தங்களது மாநிலத்தில் முழு அடைப்பு போராட்டம், இரயில் மறியல் ஆர்ப்பாட்டங்கள் என கடும் எதிர்ப்பை மக்கள் திரளோடு பதிவு செய்த காரணத்தினால் ஒன்றிய அரசு கர்நாடகாவில் அணுக் கழிவுகளை புதைக்கும் திட்டத்தை கைவிட்டுவிட்டு பின்வாங்கியது.

பிறகு தமிழ்நாட்டில் அந்த ஆபத்தான அணு உலைக் கழிவுகளை புதைப்பதற்கு ஒன்றிய அரசு ஏற்பாடுகளை செய்து வருகின்றது. இத்திட்டம் தமிழ்நாட்டில் வெற்றி பெற்றுவிட்டால் கூடங்குளம் அணு உலையில் வெளியேற்றப்படும் ஆபத்தான அணு உலைக் கழிவுகளை மட்டும் அல்லாது ஒன்றியத்தின் பிற மாநிலங்களில் இருக்கும் 22 அணு உலைகளின் கழிவுகளையும் ஒன்றிய அரசு தமிழ்நாட்டில்தான் கொண்டுவந்து புதைக்கும் என்பதை சொல்லி தெரிய வேண்டியது இல்லை.

அணு உலைக்கு எதிராக பூவுலகின் நண்பர்கள் தொடுத்த வழக்கில் நீதிமன்றம் ஒன்றிய அரசிடம் "அணுக்கழிவுகளை புதைப்பதற்கான பாதுகாப்பான முறையான தொழில்நுட்ப ஏற்பாடுகளை செய்திருக் கிறீர்களா?" என்று கேட்டதற்கு ஒன்றிய அரசு அளித்த பதில் "அவற்றை செய்வதற்கு ஐந்து ஆண்டுகள் கால அவகாசம் வேண்டும்" என்பதே.

ஆனால் நீதிமன்றம் கொடுத்த கால அவகாசத்திற்குள் ஒன்றிய அரசு அணு உலைக் கழிவுகளை கொட்டுவதற்கான பாதுகாப்பான தொழில் நுட்ப ஏற்பாடுகளை இதுவரை செய்யவில்லை; ஆனால் அதற்குள் புதைப்பதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாட்டில் துவங்கி விட்டது.

இது குறித்து மதுரை பாராளுமன்ற உறுப்பினர் சு வெங்கடேசன் அவர்கள் தற்போது எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் அளித்த பதிலில் இருந்து ஒன்றிய அரசிடம் அணு உலைக் கழிவுகளை கையாள்வதற்கான தொழில் நுட்பமே இல்லை என்பதை நாம் அறிய முடிகிறது.

இவ்வகையில் தமிழ்நாட்டிற்கு மிகப்பெரிய ஆபத்தை விளைவிக்கக் கூடிய அணு உலைக் கழிவுகளை உச்சநீதிமன்ற உத்தரவுக்கு எதிராகவும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் எச்சரிக்கையை பொருட்படுத்தாமலும், தமிழ்நாட்டு மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி தமிழ்நாட்டில் புதைக்க ஒன்றிய அரசு செய்து வரும் பணிகளை உடனடியாக கைவிட வேண்டும். அதேபோல தற்போது அமைக்கப்பட்டு வரும் அணு உலைகள் 3,4,5,6 ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.

ஒன்றியத்தில் பல்வேறு மாநிலங்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்து ஆபத்தான அணு உலைக் கழிவுகளை தத்தமது மாநிலங்களை புதைக்க விடாமல் தடுத்தது போலவே தமிழ் நாட்டு அரசும் தங்களுடைய கடும் எதிர்ப்பை பதிவு செய்து அணு உலைக் கழிவுகளை தமிழ்நாட்டில் புதைக்கும் ஒன்றிய அரசின் நாசகார திட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும்.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் இத்தனை எதிர்ப்புகளையும் மீறி இத்திட்டத்தை செயல்படுத்த முன் வருகிறது என்றால் நாமும் கர்நாடகாவை போலவே முழு அடைப்புப் போராட்டம், இரயில் மறியல், ஆர்ப்பாட்டங்கள் என மக்கள் திரள் எழுச்சி போராட்டத்தை நடத்தித் தான் இதனைத் தடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு நம்மை தூண்டுகிறது என்றுதான் புரிந்து கொள்ள வேண்டி உள்ளது. தமிழ்நாட்டு அரசும் இவ்வகையான போராட்டங்களை நடத்துவது குறித்தும் பரிசீலிக்கவேண்டும் என்பதும் நம் கோரிக்கையாகும்.

---

## எட்வின் வழங்கிய 40 சந்தாக்கள்

'புரட்சிப் பெரியார் முழக்க'த்திற்கு 40 சந்தாக்களுக்கான ரூ.10 ஆயிரம் தொகையை சென்னை கழகத் தோழர் எட்வின், ஜாதி மறுப்பு இணையர் விருது வழங்கும் விழாவில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் வழங்கினார்.



Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 17th February 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN